**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.3679/ஆ5/2023 நாள்: 30.05.2024**

பொருள் : பள்ளிக்கல்வி – "எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி" - சிறப்பு பள்ளி தூய்மை பணி செயல்பாடுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் – 03.06.2024 முதல் 05.06.2024 வரை செயல்படுத்துதல் – தொடர்பாக

பார்வை : 1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.079119/எம்/இ1/2023, நாள். 30.05.2024

•••••

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகளுக்கிணங்க, அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் தன்சுத்தம், பள்ளி வளாகத் தூய்மை, பள்ளியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறுதல், கழிவு மேலாண்மை முறைகளை அறிந்து கொள்ளுதல், மறுசுழற்சி முறைகளின் முக்கியத்துவத்தினை உணர்தல், நெகிழி பயன்பாட்டை குறைத்து இயற்கைக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவது குறித்த ஊக்கமூட்டும் நடவடிக்கைகள், பள்ளி காய்கறித் தோட்டம் அமைத்தல் ஆகியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் "எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி" என்ற திட்டம் செயல்படும்.

இத்திட்டத்தின் சிறப்பு செயல்பாடாக பள்ளித் திறக்கும் நாள் முதல் ஜூன் மாதத்தில் 03.06.2024 முதல் 05.06.2024 வரை சிறப்பு பள்ளி தூய்மை பணி செயல்பாடுகள் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பள்ளி மேலாண்மைக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம், முன்னாள் மாணவர்கள் மன்றம் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் எதிர்வரும் 03.06.2024 முதல் 05.06.2024 வரை ஆகிய நாட்களில் பள்ளி வளாகத்தில் பின்வரும் தூய்மைப் பணி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

**பள்ளி தூய்மைப்பணி நடவடிக்கைகள் –**

பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைத் தூய்மை

- ⇨ அனைத்து வகுப்பறைகளையும் தூய்மை செய்து கரும்பலகை பயன்படுத்தும் வண்ணம் இருப்பதை உறுதி செய்தல்.
- ⇨ ஆசிரியர் அறைகள், ஆய்வகம் மற்றும் வகுப்பறைகள் உட்பட்ட இதர அறைகளில் தேக்கமடைந்துள்ள தேவையற்ற பொருட்கள் மற்றும் காகிதங்களை கழிவகற்றம் செய்தல்.
- ⇨ பள்ளி அலுவலகம் மற்றும் தலைமையாசிரியர் அறையை முழுமையாக தூய்மை செய்தல்.
- ⇨ புதர்கள் மற்றும் களைச் செடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பள்ளியில் உள்ள அனைத்து வகுப்பறைகள் மற்றும் பிற அறைகளில் உள்ள தளவாட பொருட்கள், கதவு மற்றும் ஜன்னல்கள் தூய்மையாக இருப்பதை உறுதி செய்தல்.
- காலை / மதிய உணவு திட்டத்திற்கான சமையல் அறை நன்கு சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுவதுடன், சமையல் பாத்திரங்கள் முறையாக கழுவப்பட்டு பயன்படுத்துதல் மற்றும் மாணவர்கள் உணவருந்தும் இடம் தூய்மையாகப் பராமரிக்கப்படுதல்.
- பள்ளி வளாகத்தில் நீர் தேங்காவண்ணம் சுற்றுப்புறம் மேடு பள்ளம் இன்றி சமப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அனைத்து வகுப்பறைகளும் சுத்தம் செய்து, நன்றாக நீரால் தூய்மை செய்து பள்ளியில் உள்ள கட்டிடங்களும் வளாகமும் தூய்மையாக மிளிரச் செய்ய வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் சேரும் குப்பைகளை எக்காரணம் கொண்டும் எரித்தல் கூடாது.
- பள்ளி வளாகத்தில் சேரும் தேவையற்ற குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை இனம் பிரித்தல் மற்றும் மறுசுழற்சிக்காக உள்ளூர் நிர்வாகத்திடம் திடக் கழிவுகளை ஒப்படைத்தல்.
- தாழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை முறையாக தூய்மை செய்து பாதுகாப்பான முறையில் பயன்படுத்திட வேண்டும்.

<u>நிதி ஆதாரம் –</u>

- அனைத்து அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பள்ளி மான்யம் அல்லது பராமரிப்பு மான்யத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம்.
- அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி காய்கறித் தோட்டம் – ECO Club அமைத்திட வழங்கப்பட்டுள்ள நிதியின் ஒரு பகுதியினை பயன்படுத்திக் கொள்ளலாம்.
- தொண்டு நோக்கில் தன்னார்வலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட பள்ளிப் பணியில் ஆர்வம் உள்ள தனி நபர்கள், நிறுவனங்கள் ஆகியோர் துணையுடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
- உள்ளூர் நிர்வாகம் மற்றும் பிறத்துறைகளின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் சிறப்பு முயற்சிகள் மூலம் பணிகளை மேற்கொள்ளலாம்.
- பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்கள் சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) பங்களிப்பு ஆகியனவற்றையும் பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ளலாம்.
- ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து தூய்மைப்பணிகளை மேற்கொள்ளலாம்.

முன் ஆயத்த நடவடிக்கைகள் -

- அனைத்து வகை அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் விவாதித்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- "எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி" திட்டத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் 03.06.2024 முதல் 05.06.2024 வரை ஆகிய நாட்களில் சிறப்பு செயல்பாடாக பள்ளி வளாகத் தூய்மைப் பணிகளை செயல்படுத்துவதற்கான ஏற்கனவே நடைமுறையிலுள்ள பள்ளி அளவிலான குழுக்களின் கூட்டத்தினை நடத்தி உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

சிறப்பு பள்ளி தூய்மை பணி செயல்பாடுகளை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், தன்னார்வளர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளட்ட அனைத்து பொதுமக்கள் பங்கேற்போடு இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை பள்ளி அளவிலான குழு மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி தலைமையாசிரியர்கள், இச்சிறப்பு தூய்மைப் பணி சார்ந்து பணிகள் நடைபெறுவதற்கு முன் பணிகள் நடைபெறும் பொழுது மற்றும் பணிகள் முடிவுற்ற பின் புகைப்படம் எடுத்து School Login பயன்படுத்தி EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி" சிறப்பு பள்ளி தூய்மை பணி செயல்பாடுகள் மேற்கொண்டு அரசு பள்ளிகளை தூய்மையான மிளிரும் பள்ளியாக உருவாக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

30.05.24

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர் மாவட்டம்.

பெறுநர்

அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை /
மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்,
நகல்-

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக்கல்வி), அவர்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பலாகிறது. (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) மூலமாக
4. உதவி திட்ட அலுவலர் (ஒ.ப.க), வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)